

## <u>மிருதங்க வித்வான் நாகை சௌந்தரராஜனின் இசைத் தொண்டு</u>

மிருதங்க வித்வான் நாகை சௌந்தரராஜன் நாகை மாவட்டத்தில் பிறந்தவர். இவர் தனது 13வது வயதில் மிருதங்க மேதை திரு திண்ணியம் வெங்கட்ராமய்யரிடம் மிருதங்கம் கற்கத் தொடங்கி, 22வது வயது முதல் கச்சேரிகளில் வாசித்து வருகிறார்.

தற்போது 72 வயது ஆகும் இவர் எம்.எல். வசந்தகுமாரி, வயலின சந்திரசேகர், பி.வி. ராமன் பி.வி. லட்சுமணன் சகோதரர்கள் G.N. தேசிகன் தேரழுந்தூர் சகோதரிகள போன்ற பீரபல இசைக் கலைஞர்களுக்கு மிருதங்கம் வாசித்துள்ளார்.

இவர் 1952 ஆம் ஆண்டு களக்காடு ராமநாராயண ஐயர், பி.வி. ராமன் பி.வி. லட்சுமணன் வீணை வாசு ஆகியோருடன் சேர்ந்து ஸ்ரீ ஸத்குரு கான நிலையத்தை ஆரம்பித்தார். ஒவ்வொரு ஆண்டும் திருவையாறில் ஸ்ரீதியாகராஜர் ஆராதனை விழா நடைபெறுவதைப் போலவே சென்னையிலும் நடத்தவேண்டும் என்ற ஆசையில் 52 ஆண்டுகளாக தியாகராஜர் உற்சவத்தை சிறப்பாக நடத்தி வருகிறார். இந்த உற்சவத்தில் வைத்து பூஜிக்கப்படும் தியாகராஜர் படம் இவருடைய தந்தை வாசு ஐயங்கார் தன் கைப்படவே வரைந்த படமாகும். இந்த விழாவில் பிரபல வித்வான்கள் பலர் பங்குபெற்றுள்ளனர்.

நாகை சௌந்திரராஜன், 1970 ஆம் ஆண்டு தமிழக கவர்னரிடம் இருந்து **"பெஸ்ட் ஜூனியர் வித்வான்"** என்ற விருதை பெற்றுள்ளார். கிருஷ்ணன் கான சபாவும் இவருக்கு பாலக்காடு மணி ஐயர் நினைவு விருது வழங்கி கௌரவித்துள்ளது. மேலும் பாரத் கலாச்சார், செம்மங்குடி ஸ்ரீநிவாச ஐயர் நினைவு விருது வழங்கி இவரை கௌரவித்துள்ளது. இவர், மாதா மாதம் பகுள பஞ்சமி இசைக் கச்சேரியும் நடத்தி வருகிறார். இதில பல வித்வான்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர். இவர் மிருதங்க வகுப்புகளும் நடத்தி வருகிறார்.

இவர், மேற்கு மாம்பலம் 180 லேக் வியூ ரோடிலுள்ள ஜனகம் பிளாட்ஸில் வசித்து வருகிறார்.

இவரைத் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்.24740043.